## DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure )

--

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.181/2022 | அரசுத்தரப்பு | P.W.9 |
| பெயர் | அருணகிரி | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | வரதராஜ் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.08.2025.

எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் திருச்சிராப்பள்ளி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து 2024ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 16.08.2021 தேதியில் புதுக்கோட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்த போது திருக்கோகர்ண காவல் ஆய்வாளரிடம் இருந்து பெறப்பட்ட தொலைபேசி தகவலின்படி குற்ற எண். 648/2021 சம்மந்தப்பட்ட குற்ற நிகழ்விடம் பார்வையிடும் பணிக்காக கம்மாளர் தெரு, நேரு வீதியில் உள்ள சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடம் பார்வையிட்டபோது வீட்டில் கதவு நிலையில் தொங்கி கொண்டிருந்த ஸ்கிரீன் துணி எரிந்த நிலையில் காணப்பட்டிருந்தது. அதன் அருகில் உடைந்த நிலையில் ஒரு கண்ணாடி பாட்டிலும், திரியும் காணப்பட்டது. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட மேற்படி தடய பொருட்களை மேல் பரிசோதனைக்காக சென்னை தடய அறிவியல் துறை வேதியியல் பிரிவுக்கு அனுப்பி எந்தவிதமான எரிபொருள் பயன்படுத்தப்பட்டது என்பதை அறியும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை

போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை தடய அறிவியல் துறை வேதியியல் பிரிவுக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை என்று நான் காவல் ஆய்வாளரிடம் வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை. நான் கைப்பற்றும்போது அந்த பாட்டிலில் பெட்ரோல் போன்ற திரவம் எதுவும் இல்லை. திரி எரிந்த நிலையில் இருந்ததா என்று கேட்டால் திரி எரிந்த நிலையில் தான் இருந்தது. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போதும் திரி எரிந்த நிலையில் இருந்ததாக தான் நான் கூறினேன். மேற்படி சான்று பொருட்களை சேகரித்து ஆய்வு செய்வதற்காக எனக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. அதுபோன்று அலுவல் ரீதியான தொடர்புக்காக வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போன்று சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னாலும் மேற்படி சான்று பொருட்களை சேகரிக்கவில்லை என்று சொன்னாலும், சென்னை தடய அறிவியல் துறை வேதியியல் பிரிவுக்கு அனுப்புவதற்கு பரிந்துரை செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– அருணகிரி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.